# இலங்கையின் இராமாயணச் சுற்றுலா மையங்கள்.

**ஜீ.பால்ராஜ்[1], ச.முகுந்தன்[2]**


## ஆய்வுச்சுருக்கம்

*உலகில் வளர்ச்சிகண்ட பெருந்துறையாகச் சுற்றுலாத்துறை விளங்குகின்றது. சுற்றுலா மூலமாக நாட்டிற்கு அதிக வருமானம் கிடைப்பதனால், அத்துறையில் தொழில்வாய்ப்புக்களும் பெருகி வருகின்றன. இவ்வாறு காலமாற்றத்திற்கேற்ப வளர்ந்து நிற்கும் சுற்றுலாத்துறையை மையமாகக்கொண்டு இந்துநாகரிக விடயப்பரப்பிற்குள் 'இந்துக்கலாசாரச் சுற்றுலா' எனும் பாடநெறி வளர்ச்சி கண்டுள்ளது. சுற்றுலா என்பதனைச் 'சுற்றிப்பார்த்தல்' அல்லது 'ஓர் இடத்தில் இருந்து இன்னுமோர் இடத்தினைப் பார்வையிடப் பயணமாதல்' எனச்சுருக்கமாக வரையறை செய்யலாம். இந்துக்கலாசாரச் சுற்றுலா என்பது இந்துக்களின் புனிதத்தலங்கள், விழாக்கள், கலைகள், பழக்கவழக்கங்கள், நினைவுச்சின்னங்கள் போன்றவற்றைக் கண்டுகளிப்பதற்காக மேற்கொள்கின்ற பயணங்களாகும். இந்துக்கலாசாரச் சுற்றுலாவினை விரும்பும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் இராமாயணத்துடன் தொடர்புபட்ட சுற்றுலா மையங்களைப் பார்வையிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்தியாவில் தோன்றிய இந்துசமயம் எமது நாடான இலங்கையிலும் பரவியது யாவரும் அறிந்ததே. அந்தவகையில், இந்துக்களின் புனித இலக்கியங்களுள் ஒன்றான வான்மிகியால் பாடப்பட்ட இராமாயணத்திற்கும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இதனால் இராமாயணக்கதையுடன் தொடர்புபட்டதாக, இலங்கையில் நுவரெலியா சீதையம்மன் கோவில், ஹக்கல பூங்கா மட்டக்களப்பு மாமாங்கேஸ்வர தீர்த்தக்கேணி, திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்று முதலான பல இடங்கள் காணப்படுகின்றன. அவ்வாறான இடங்கள் இன்று சுற்றுலாவியலில் மிகுந்த முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. உள்நாட்டவர்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களும் அதிகம் சுற்றுலாப் பயணம் செல்லும் இடங்களாக இராமாயணத்துடன் தொடர்புடைய மேற்குறிப்பிட்ட சுற்றுலா மையங்கள் விளங்குகின்றன. ஆகவே இலங்கையில் காணப்படும் இராமாயணச் சுற்றுலா மையங்களை இனங்கண்டு அவை பற்றிய வரலாற்றினையும், இந்துக்கலாசாரச் சுற்றுலாவியலில் அவை பெறுகின்ற முக்கியத்துவத்தினையும் வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வில் வரலாற்றியல் ஆய்வு அணுகுமுறையும் விபரணஆய்வு அணுகுமுறையும் பயன்படுத்தப்படுகின்றன.*


**திறவுச்சொற்கள்:** இலங்கை, இராமாயணம், இந்துக்கலாசாரம், சுற்றுலா, மையங்கள்

*[1]இந்துநாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.*

*[2]இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

**அறிமுகம்**

உலகில் வளர்ச்சிகண்ட பெருந்துறையாகச் சுற்றுலாத்துறை விளங்குகின்றது. அனைவராலும் விரும்பப்படுகின்ற ஒன்றாக அது விளங்குகின்றமையே இதற்கு காரணமாகும். சுற்றுலா என்பதனைச் 'சுற்றிப்பார்த்தல்' அல்லது 'ஓர் இடத்தில் இருந்து இன்னுமோர் இடத்தினைப் பார்வையிடப் பயணமாதல்' எனச்சுருக்கமாக வரையறை செய்யலாம்.

சுற்றுலா, நோக்கங்களின் அடிப்படையில் பல வகைப்படுகின்றது. சுற்றுலாவின் வகைகளாக ஆன்மிகச் சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா, வியாபாரச் சுற்றுலா, பொழுதுபோக்குச் சுற்றுலா, கலாசாரச் சுற்றுலா போன்றன அடையாளங் காணப்படுகின்றன. இவற்றுள் கலாசாரச் சுற்றுலா முதன்மை வகிக்கிறது. டாக்டர் ஷியாடின், ''ஓய்வு கவனமாற்றம் மற்றும் கலாசாரக் கூறுகளில் மனநிறைவளிக்கும் ஒரு சமூகச்செயல்பாடே சுற்றுலா'' என கலாசாரச் சுற்றுலா தொடர்பாக கூறிச்சென்றுள்ளார்.

இவ்வகையில், இந்துக்கலாசாரச் சுற்றுலா என்பது இந்துக்களின் புனிதத்தலங்கள், விழாக்கள், கலைகள், பழக்கவழக்கங்கள், நினைவுச்சின்னங்கள் போன்றவற்றைக் கண்டுகளிப்பதற்காக மேற்கொள்கின்ற பயணங்களாகும். இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் இந்துக்கலாசாரச் சுற்றுலாவினை மேற்கொள்ளச் சிறந்த இடங்களாக விளங்குகின்றன.

இலங்கையின் இந்துக்கலாசாரச் சுற்றுலாவியலில் இராமாயணத்தின் செல்வாக்குக் கொண்ட இடங்கள் பல காணப்படுகின்றன. அத்தகைய இடங்களைப் பார்வையிடுவதில் இன்று அதிகமான சுற்றுலாப்பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். பாரத தேசத்தில் எழுந்த இராமாயணத்திற்கும், இலங்கைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இக்காவியத்தில் குறிப்பிடப்படுகின்ற இராவணன் இலங்கை வேந்தன் ஆவான். இவன் ஒரு தமிழ் மன்னன் என்பதுடன் சிறந்த சிவபக்தனும் ஆவான்.

இவன் சீதாப்பிராட்டியைத் தனது புஷ்பக விமானம் மூலம் இந்தியாவிலிருந்து கவர்ந்துவந்து, இலங்கையில் அசோக வனத்தில் (ஹக்கல) வைத்திருந்தான் என்றும் அவரை மீட்க, ஆஞ்சநேயர் உட்பட இராமர் குழு கடல்கடந்து இலங்கை வந்ததாகவும் இராமாயணம் கூறும். இத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்ததற்கான அடையாளங்களாக, இலங்கையில் நுவரெலியா சீதையம்மன் கோவில், ஹக்கல பூங்கா, இறம்பொடை ஆஞ்சநேயர் கோவில், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வர தீர்த்தக்கேணி முதலான பல இடங்கள் காணப்படுகின்றன. அத்தகைய இடங்கள் இந்துக்கலாசாரச் சுற்றுலாவியலில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே, இந்துக்கலாசாரச் சுற்றுலாவியலில் முக்கியத்துவம் பெறும் இலங்கையின் இராமாயணச்சுற்றுலா மையங்களை இனங்கண்டு அவற்றை எழுத்து வடிவில் வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆலயங்கள்**

இலங்கையில் இராமாயணத் தொன்மங்களுடன் தொடர்புபட்ட, தொன்மைவாய்ந்த ஆலயங்கள் பல காணப்படுகின்றன. அவ்வாறான ஆலயங்களாக, திருக்கோணேஸ்வரம், முன்னேச்சரம், திருக்கேதீச்சரம், நுவரெலியா சீதையம்மன் கோயில் போன்றவற்றைக் குறிப்பிடமுடியும். இக்கோயில்கள் பக்தியையும், ஆன்மிகத்தையும் வளர்க்கும் மையங்களாக மட்டுமன்றி, இராமாயணச் சுற்றுலா மையங்களாகவும் விளங்குகின்றன.

**திருக்கோணேஸ்வரம்**

திருகோணமலையில், இயற்கையாக மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்ட மலை உச்சியில் திருக்கோணேஸ்வரத் திருத்தலம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் இயற்கை வனப்பினை, திருஞானசம்பந்தர் கோணேச்சரப்பதிகத்தில், ''கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை'' எனச்சிறப்பித்துப் பாடியுள்ளார்.

இராமாயண காலத்தில் பேசப்பட்ட ஆலயமாக இது விளங்குகின்றமை இதன் தொன்மைக்குச் சான்றாகும். ஆலயம் பற்றிய வரலாற்றினை, தொகுத்துக்கூறும் நூல்களாகக் கோணேசர் கல்வெட்டு, தட்சிணகைலாச புராணம், திருக்கோணாசல புராணம், திருக்கரைசை புராணம் போன்ற இலக்கியங்கள் விளங்குகின்றன.

திருக்கோணேஸ்வரத் தலம் இராமாயணத்துடன் தொடர்புபட்டுள்ளதை மரபுவழிக்கதைகள் மூலமாகவும், இலக்கியங்கள் வாயிலாகவும் அறிந்துகொள்ள முடிகிறது. இராவணன் தென்னிலங்கையை ஆட்சிசெய்த காலத்தில், தட்சிண கைலாயம் எனப் போற்றப்படுகின்ற திருக்கோணேஸ்வரத்தை வழிபட்டு வந்தான் என்று பிரபல்யமான கர்ணபரம்பரைக்கதை கூறுவதாக, மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. மாவினாலும், மண்ணினாலும் சிவலிங்கம் அமைத்து வழிபாட்டினை மேற்கொண்ட தன் தாயாருக்கு நிலையான சிவலிங்கம் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக விரும்பிப் பெயர்த்த மலை தட்சிணகைலாயமாகிய கோணமாமலை என்று தட்சிண கைலாசபுராணம் கூறுகின்றது. இதற்குச் சான்றாக, இம்மலைப் பாறையில் பெரிய பிளவு ஒன்று காணப்படுகின்றது. இது 'இராவணன் வெட்டு' என்று அழைக்கப்படுகின்றது.

சிவபக்தனான இராவணனைக் கொன்றழித்தமையால் இராமபிரானை பிரம்மஹத்தி தோசம் பின்தொடர, அதிலிருந்து விடுபடுவதற்காக இராமபிரான் சிவலிங்கம் அமைத்து சிவலிங்கப்பூசை செய்து, வழிபட்ட ஆலயமாகவும் இத்தலம் விளங்குகின்றது. இவ்வாறு

இராமாயணக்கதையுடன் தொடர்புபட்ட இத்திருத்தலம் இன்று இராமாயணச்சுற்றுலா மையங்களில் ஒன்றாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இராமாயணத்துடன் தொடர்புபட்ட சுற்றுலா மையங்களைப் பார்வையிட வருகின்ற அதிகமான சுற்றுலாப்பயணிகள் திருக்கோணேஸ்வரத் தலத்திற்குப் பயணமாகின்றனர். இங்கு 'இராவணன் வெட்டு' என்று கூறப்படும் பாறைப்பிளவு, இராவணன் சிலை போன்ற இராமாயணத் தொன்மங்களைப் பார்வையிட்டுச் செல்கின்றனர். ஆண்டுக்கொரு முறை இடம்பெறும் மகோற்சவத் திருவிழா மற்றும் சிவராத்திரி விரதம் போன்றவற்றைக் காணவும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து வருகை தருகின்றனர். இத்தலம் இராமாயணச் சுற்றுலாவினை மேற்கொள்பவர்களுக்கு ஒரு சிறந்த சுற்றுலா மையமாகக் காணப்படுவதனால், இங்கு உள்நாட்டவர்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களும் கோணைநாதர் மாதுமையாள் சமேதரராக வீற்றிருக்கும் அழகைக்காண வருகை தந்தவண்ணமுள்ளனர்.

**முன்னேச்சரம்**

இலங்கையின் தொன்மையான, புகழ்மிக்க சிவாலயங்களில் இத்தலமும் ஒன்றாகும். இத்தலம் வடமேல் மாகாணத்தில் உள்ள புத்தளம் எனும் மாவட்டத்தில் நீர்வளமும், நிலவளமும் கொண்டு இயற்கை எழிலுடன் விளங்கும் சிலாபம் எனும் இடத்தில் அமைந்துள்ளது. ஏறத்தாழ சிலாப நகரிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் பயணித்தால் இவ்வாலயத்தைச் சென்றடையலாம். இதற்கு அருகில் 'மாயவனாறு' எனும் தெதுறு ஓயா பாய்கிறது. அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகத் திகழும் இவ்வாலயத்தின் இறைவன் பெயர் முன்னைநாதர் இறைவி பெயர் வடிவாம்பிகையாகும்.

இராமாயணத்துடன் தொடர்புபட்ட தலமாகக் காணப்படுவதனால், இராமாயணச்சுற்றுலா மையங்களுள் ஒன்றாக இவ்வாலயம் விளங்குகின்றது. இராவணனை சங்காரம் செய்து, போரிலே வெற்றி கொண்ட இராமபிரான், இராவணனுடைய புஷ்பக விமானத்திலே அயோத்தி நோக்கிப் புறப்பட்டார். அவ்வாறு புறப்படும் போது, சிறந்த சிவபக்தனும் பிராமணனுமாகிய இராவணனைக் கொன்றதனால், பிரம்மஹத்தி தோசம் அவரை நிழல் வடிவில் பின்தொடர்ந்தது. அதை உணர்ந்த இராமபிரான் அங்கு தரையிறங்கி பிராயச்சித்தமாக மாயவனாற்றின் கரையிலே சிவலிங்கம் ஒன்றைப் பிரதிட்டை செய்து, சிவாலயம் உண்டாக்கினார் என்பது நவபுராணக்கதையாகும். இக்கதையே முன்னேஸ்வர மான்மியத்தில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு இந்த ஆலயம் இராமாயணக்கதையுடன் தொடர்புபட்டுள்ளதனால், இலங்கையின் இராமாயணச்சுற்றுலா மையங்களில் இத்தலமும் ஒன்றாக விளங்குகின்றது. எவ்விதமான வேற்றுமைகளுமின்றி சகல இனத்தவர்களும், சமயத்தவர்களும்

வழிபாட்டிற்காகவும், ஆன்மிகச் சுற்றுலாவிற்காகவும் இத்தலத்திற்கு வருகை தந்தவண்ணமுள்ளனர். ஆண்டுக்கொரு முறை இடம்பெறும் மகோற்சவத் திருவிழாவினைக் காணவும், சிவராத்திரி, நவராத்திரி போன்ற விரதங்களை அனுஸ்டிக்கவும் இலங்கையில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் பலர் சுற்றுலாப்பயணம் மேற்கொண்டு இத்தலத்திற்கு வருகை வருகை தருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நுவரெலியா சீதையம்மன் கோயில்**

இலங்கையின் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ஹக்கலவில் இக்கோயில் அமைந்துள்ளது. சீதாதேவிக்கு அமைக்கப்பட்டிருக்கும் ஒரேயொரு ஆலயமாகவும், இராமாயணத்துடன் தொடர்புடைய முக்கியமான சுற்றுலா மையமாகவும் இவ்வாலயம் விளங்குகிறது. இராமாயணத்துடன் தொடர்புடைய பலதடயங்கள் ஆலயத்தைச் சூழ காணப்படுகின்றன. ஆலயம் அமைந்திருக்கும் இடமே இராவணன் சீதையினை சிறைவைத்திருந்த, இராமாயணத்தில் வருகின்ற அசோக வாடிகா எனப்படுகின்ற அசோகவனமாகும். அசோக மரங்கள் சூழ்ந்திருந்ததால் இப்பெயர் பெற்றது. சீதையம்மன் சிறை வைக்கப்பட்டிருந்த இடத்தில் இக்கோயில் கட்டப்பட்டதால் கிராம மக்களால் இவ்விடம் 'ஆதிசக்தி சீதையம்மன் கோயில்' என்றும் 'சீதா எலிய' எனவும் அழைக்கப்படுகின்றது. இங்கு இராமர், சீதாதேவி, அனுமன், இலக்குமணன் போன்றோரின் தொன்மையான சிலைகள் காணப்படுகின்றன.

வானுயர்ந்து விளங்கும் மரங்கள் நிறைந்த, பசுமையான மலையைப் பின்னணியாகக் கொண்டு மலைச்சரிவில் இக்கோயில் அமைந்துள்ளது. மலையின் இயற்கை வனப்பு, நீரோடையின் சலசலக்கும் சத்தம், குளிர் காற்று என்பன மனதிற்கு அமைதியையும் குளிர்ச்சியையும் வழங்குகின்றன. கோயிலுக்குச் செல்லும் வழியில் சாலையெங்கும் சிவப்பு நிற பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. வெண்மையாக காணப்பட்ட பூக்கள் அனுமனின் கைகள் பட்ட காரணத்தினால் சிவப்பு நிறத்திற்கு மாறின என்ற ஐதீகமும் அப்பிரதேச மக்களிடம் உண்டு. இத்தகைய அழகினைக் கண்டுகளிப்பதற்காக உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலிருந்தும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் வருகை தந்தவண்ணமுள்ளனர்.

ஆலயத்தின் எதிரே அமைந்துள்ள பிரமாண்டமான மலையின் உச்சியில் இராவணனின் கோட்டையும், அரண்மனையும் இருந்ததாக நம்பப்படுகிறது. அந்த மலையின் முன்பகுதி அனுமனின் முகம்போல காட்சியளிக்கிறது. கோயில் மண்டபத்திலே இராமர், சீதா கல்யாணம், சீதாதேவி மானைப் பிடித்துத்தரும்படி வேண்டுதல், இராவணன் புஷ்பக விமானத்தில் சீதாதேவியை கவர்ந்து வருதல், அசோக வனத்தில் இராமரின் கணையாழியுடன் சீதாதேவியை அனுமன் காணுதல் போன்ற இராமாயணக்காட்சிகள் கண்கவர் ஓவியமாக வரையப்பட்டுள்ளன.

இக்கோயிலுக்கு அருகாமையில் குளிர்ச்சியான ஒரு அருவி மலையிலிருந்து வழிந்தோடுகின்றது. இந்த அருவியை சீதாப்பிராட்டியார் நீராட பயன்படுத்தியதால் இது 'சீதா அருவி' என அழைக்கப்படுகிறது. நீராடியதன் பின்னர் தனது கூந்தலை அந்த மலையில் இருந்து உலர்த்தியதாக ஐதீகங்கள் நிலவுகின்றன. அந்தப்பாறையில் அனுமனின் காலடித்தடங்கள் காணப்படுகின்றன. பாதச்சுவடுகள் காணப்படுவதற்கு மேலே சிறிய மேடை அமைத்து, அதில் இராமபிரான் கொடுத்த கணையாழியை அனுமன் சீதையிடம் தரும் காட்சி சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. ஆலயத்தை ஒட்டிய ஒருபகுதியின் மண் கருமை நிறமாகவும் மறுபகுதி இயல்பான நிறத்திலும் அமைந்துள்ளது. இலங்கையை அனுமன் எரித்ததால் ஏற்பட்டது என்ற ஐதீகம் உண்டு. ஆலயத்தைச்சூழ காணப்படும் அழகிய மரங்களும், பூந்தோட்டங்களும் அருகில் ஓடும் அருவியும் ஆலயத்திற்கு மேலும் கவர்ச்சியை வழங்குகின்றன. ஆலயத்தின் இயற்கைச் சூழமைவும், புனிதத்தன்மையும் அதிகமான சுற்றுலாப்பயணிகளை கவர்கின்றன. இதனால் அதிகமான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் வருகை தந்து பார்வையிட்டுச் செல்லும் இராமாயணச்சுற்றுலா மையமாக இக்கோயில் சிறப்புற்று விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

**றம்பொடை ஆஞ்சநேயர் கோயில்**

இலங்கையில் இராமாயணத்துடன் தொடர்புடைய ஆலயம் என்பதனால், இராமாயணச்சுற்றுலா மையங்களில் ஒன்றாக, இவ்வாலயம் விளங்குகின்றது. இலங்கையில் நுவரெலியாவுக்கு வடக்கே முப்பது கிலோமீற்றர் தொலைவில் றம்பொடை எனும் ஊரில் உள்ள அழகான மலையுச்சியில் இக்கோயில் அமைந்துள்ளது. இயற்கையின் பசுமை இவ்வாலயத்தை அழகுற காட்டுகின்றது. இதனால் இராமாயணச் சுற்றுலாவினை மேற்கொள்கின்ற உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் இங்கு வருகை தந்து இந்த ஆலயத்தையும் அது அமைந்திருக்கின்ற இயற்கைச்சூழலினையும் பார்வையிட்டு மகிழ்ந்து செல்கின்றனர்.

ஒரு பெரிய பள்ளத்தாக்குடன், இரண்டு தொடர் மலைகள் காணப்படுகின்றன. பள்ளத்தாக்கின் இரு புறமும் உள்ள இந்த மலைகள் பாரம்பரியமாக உள்ளூர் மக்களால், வடக்குப்பகுதியில் உள்ள மலை 'ரம்போடா' என்றும் தெற்குப்பகுதியில் உள்ள மலை 'ராவணபோடா' என்றும் அழைக்கப்படுகின்றன. ரம்பொடை மலையில் இராவணனுக்கு எதிராக போர் தொடுப்பதற்கு, ராமர் படையொன்று தயாராக இருந்ததாகவும் இதனால் ராம்படை என்ற பெயர் வந்ததாகவும் காலப்போக்கில் றம்பொடையாக பெயர் மருவியுள்ளதாகவும் கூறப்படுகிறது. ராவணபோடா என்னும் மலையில் இராவணன் தன் படைகளை வைத்திருந்ததாக கூறப்படுகின்றது. சீதையைக்காண வந்த அனுமன் முதன் முதலில் கால் ஊன்றிய இடமாகவும் அவரைத்தேடிய இடமாகவும், இளைப்பாறிய இடமாகவும் கூறப்படுகிறது. சின்மயா மிஷனால் 1999 இல் இங்கு ஆலயம் கட்டப்பட்டது. 16 அடி உயரமான அனுமன் சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. பூரணை தினம் இங்கு விசேடமாகும். இதன்போது அனுமன்

சிலையினை மலர்மாலைகளாலும் மற்றும் வண்ணமயமான பட்டுக்களாலும் அலங்கரிக்கின்றனர். இங்கு 'ஹனுமன் ஜெயந்தி' சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாக்களை கண்டுகளிப்பதற்காகவும், இங்குள்ள இராமாயணத் தொன்மங்களைப் பார்வையிடுவதற்காகவும் ஏராளமான சுற்றுலாப்பயணிகள் வருகை தந்தவண்ணமுள்ளனர்.

இவை தவிர திருக்கேதீஸ்வரம், கதிர்காமம், நுவரெலியா காயத்ரி பீடம், களனி பௌத்த கோயில், புத்தளம் மானாவரி சிவன் கோயில், திருக்கோயில் சித்திர வேலாயுதர் ஆலயம், வந்தாறுமூலை அம்மன் கோயில், முதலிய ஆலயங்களும் இலங்கையில் இராமாயணத்துடன் தொடர்புபட்ட, இராமாயணச்சுற்றுலா மேற்கொள்ளக்கூடிய ஆலயங்களாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

**தீர்த்தக்கேணிகளும் நீரூற்றுக்களும்**

இராமாயணத்துடன் தொடர்புடைய தீர்த்தக்கேணிகள் மற்றும் நீர் ஊற்றுகள் இலங்கையில் பல இடங்களில் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொன்ம வரலாற்றினைக் கொண்டுள்ளதுடன், அவை சிறந்த இராமாயணச் சுற்றுலா மையங்களாகவும் விளங்குகின்றன. இவ்வாறு காணப்படும் நீர்நிலைகளாக, அமிர்தகழி மாமாங்கேஸ்வர தீர்த்தக்கேணி, யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வில்லூன்றி தீர்த்தக்கேணி, கன்னியா வெந்நீர் ஊற்று போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

**அமிர்தகழி மாமாங்கேஸ்வர தீர்த்தக்குளம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில், மட்டக்களப்பு நகரின் மத்தியிலிருந்து வடக்காக ஐந்து கிலோமீற்றர் தொலைவில் உள்ள அமிர்தகழி என்னும் ஊரில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ்மிக்க ஆலயமே மாமாங்கேஸ்வரத் தலமாகும். இந்த ஆலயத்தின் தீர்த்தமாக மாமாங்கேஸ்வரத் தீர்த்தக்குளம் அமைந்துள்ளது. இவ்வாலயமும் அதன் தீர்த்தக்குளமும் இராமாயணத்துடன் தொடர்புபடுவதனால், அவை இராமாயணச்சுற்றுலா மையங்களாகவும் விளங்குகின்றன.

இராமபிரான் சீதாதேவியுடன் இலங்கையிலிருந்து அயோத்திக்கு சென்ற வேளை இவ்வழியாகவே வந்தாரென்றும், இவ்விடத்தில் ஓய்வெடுத்து இளைப்பாறியதாகவும், இங்கு சிவனுக்கு பூசைசெய்ய நினைத்து, அனுமனை விந்திய மலையிலிருந்து லிங்கம் கொண்டு வர அனுப்பியதாகவும் அனுமன் வரத்தாமதமாகவே, இராமபிரான் மண்ணினால் ஒரு லிங்கத்தை அமைத்து, தனது கோதண்டமாகிய வில்லை நிலத்தில் ஊன்றி நீர் பெற்று லிங்கத்திற்கு அபிஷேகம் செய்து பூசையை முடித்ததாகவும் கோதண்டம் ஊன்றிய இடம் குளமாகியதாகவும் மரபுவழிக்கதை நிலவுகின்றது. இராமர் கோதண்டம் ஊன்றிய இடமே மாமாங்கேஸ்வர தீர்த்தக்குளம் எனவும் இராமருடைய பூசைக்காக காலம் தாழ்த்தி கொண்டுவரப்பட்ட லிங்கமும் பூசைசெய்யப்பட்டு இத்திருக்குளத்தில் புதைத்துவிடப்பட்டது எனவும் நம்பப்படுகிறது.

ஆடி அமாவாசையன்று இலங்கையின் பலபாகங்களிலும் இருந்து அதிகமான பக்தர்கள் வருகைதந்து தங்களது பிதிர்க்கடன்களை நிறைவேற்றுகின்ற தலமாகவும் இது காணப்படுகின்றது.

சுற்றுலாப்பயணிகளைக் கவரும் வண்ணம் இயற்கையாக தாமரை மலர்கள் பூத்துக்குலுங்க அழகாகவும் மிகவும் குளர்ச்சியாகவும் இந்தக்குளம் காணப்படுகின்றது. இராமாயணச்சுற்றுலாவினை விரும்பும் சுற்றுலாப்பயணிகள் இங்கு வருகை தந்து இராமாயணத்துடன் தொடர்புடைய இந்தக்குளத்தின் இயற்கை அழகினையும் ஆலயத்தின் வனப்பினையும் பார்வையிட்டு மகிழ்ந்து செல்கின்றனர்.

**வண்ணார்பண்ணை வில்லூன்றி தீர்த்தக்கேணி**

யாழ்ப்பாண மாவட்டத்தில் வண்ணார் பண்ணை எனும் இடத்தில் உள்ள வீரகத்திப்பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் இத்தீர்த்தக்கேணி அமைந்துள்ளது. இத்தீர்த்தக்கேணி உருவான வரலாறு இராமாயணத்துடன் தொடர்புபடுவதனால், இராமாயணத்துடன் தொடர்புடைய சுற்றுலா மையமாக இது பேசப்படுகின்றது. இராமர் தனது கோதண்டமாகிய வில்லை ஊன்றியதால் இந்த தீர்த்தக்கேணி உருவாகியதாக கர்ணபரம்பரைக்கதை ஒன்று நிலவுகின்றது. இக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் இத்தீர்த்தக்கேணியின் அழகினையும் பார்வையிட்டு மகிழ்ந்து செல்கின்றனர். அத்துடன் வடமாகாணத்திற்கு சுற்றுலாவினை மேற்கொள்ளும் சுற்றுலாப்பயணிகள் இத்தீர்த்தக்கேணியை பார்வையிட வண்ணார்பண்ணை நோக்கியும் பயணமாகின்றனர். இத்தீர்த்தக்கேணியில், இறந்த ஆத்மாக்களுக்காக பிதிர்க்கடன்களை நிறைவேற்றும் பொருட்டும் பல இடங்களில் இருந்தும் பலர் வருகை தந்து இத்தீர்த்தக்கேணியில் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுகின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**கன்னியா வெந்நீர் ஊற்று**

திருகோணமலை மாவட்டத்தில் காணப்படுகின்ற இராமாயணத்துடன் தொடர்புடைய பண்டைய சைவத்தமிழரின் பாரம்பரிய அடையாளமாகவும், பிரபல்யமான சுற்றுலா மையமாகவும் கன்னியா வெந்நீர் ஊற்று திகழ்கிறது. திருகோணமலையிலிருந்து பத்து கிலோமீற்றர் தூரமளவில் இந்த இராமாயணச்சுற்றுலா மையம் அமைந்துள்ளது. இங்கு ஏழு நீர் ஊற்றுக்கள் காணப்படுகின்றன. இதனைக்காண உள்நாட்டில் மாத்திரமன்றி வெளிநாடு களில் இருந்தும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் இங்கு வருகை தந்தவண்ணமுள்ளனர்.

கன்னியா வெந்நீர் ஊற்று இராமாயணத்துடன் தொடர்புபடுவதனை தட்சிணகைலாய புராணம் வாயிலாகவும் அறிந்துகொள்ள முடிகிறது. தாயின் சிவவழிபாட்டிற்காக தட்சிணகைலாயத்தில் உள்ள லிங்கத்தை எடுப்பதற்காக சென்ற இராவணன், மலையிருந்து கீழே வீழ்ந்து இறந்துவிட்டான் என்று கேள்விப்பட்டதால், தாய் கைகேசி புத்திர சோகத்தால்

உயிர்துறந்ததாகவும், அதன்பின்னர் தாயின் இறுதிக்கிரியைகளை செய்து முடிப்பதற்காக இராவணன் ஏழு தீர்த்தங்களை உருவாக்கியதாகவும் அத்தீர்த்தத்தில் தனது தாயின் இறுதிக்கிரியைகளை செய்து முடித்ததாகவும் தட்சிணகைலாய புராணம் கூறுகிறது.

அங்கு நிலவும் கர்ணப்பரம்பரைக்கதை பின்வருமாறு கூறுகிறது. இராவணன் தனது தாயார் வழிபடுவதற்காக சிவலிங்கத்தைப் பெறுவதற்கு கோணேஸ்வரநாதரை நினைத்து அத்தலத்தில் தவம் செய்து, சிவன் காட்சியளிக்காததால் ஏமாற்றமடைந்து கடுஞ்சினங்கொண்டு கோணேஸ்வர மலையை தனது வாளால் வெட்டி மலையை அசைத்தபோது சிவன் தனது பெருவிரலால் நசுக்க, இராவணன் மலையின்கீழ் அகப்பட்டுக்கொண்டான். இதனை அறிந்த தாய் கைகேசி மகன் இறந்துவிட்டான் எனநினைத்து மனத்துயரினால் அவளும் இறந்துபோக, தாய் இறந்த செய்தியை அறிந்த இராவணன் கவலையுற்று, தாயின் இறுதிக்கிரியைகளை செய்வதற்காக தனது வாளால் நிலத்தை குத்தி நீரூற்றுக்களை ஏற்படுத்தினான். அவன் குத்திய ஏழு இடங்களில் இருந்து ஏழு நீரூற்றுக்கள் சுரந்து வெளிப்பட்டன. இவைகளே கன்னியா வெந்நீரூற்றுக்களாகும் என்பது கர்ணப்பரம் பரைக்கதை.

எனவே, கன்னியாவில் காணப்படும் வெவ்வேறு வெம்மை அளவுள்ள ஏழு வெந்நீர் ஊற்றுக்களும் இராமாயணத் தொன்மத்துடன் தொடர்புடையது என்பது தெளிவாகின்றது. இதனால்தான் இராமாயணத்துடன் தொடர்புடைய சுற்றுலா மையமாக இந்த இடம் காணப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்திற்கு வரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் கன்னியாவில் காணப்படும் ஏழு வெந்நீர் ஊற்றுக்ளையும் பார்வையிடுவதோடு, அந்நீர்நிலைகளில் மனமுவந்து நீராடிச் செல்கின்ற நிலையையும் கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது.

**நிலாவரைக்கிணறு**

இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இராமாயணத்துடன் தொடர்புடைய சுற்றுலா மையங்களில் யாழ்ப்பாணம் புத்தூரில் அமைந்துள்ள நிலாவரைக்கிணறும் ஒன்றாகும். பண்டைய காலத்தில் இக்கிணற்றின் ஆழம் யாருக்கும் தெரியாததால் இதன் ஆழம் வானில் உள்ள நிலாவரைக்கும் எனக் கூறப்பட்டது. இதன் காரணமாக இதன் பெயர் ‘நிலாவரை’ என உருவாகியதாக கூறப்படுகிறது.

நிலாவரைக்கிணற்றுடன் தொடர்புடைய கர்ணபரம்பரைக்கதை இராமாயணத்துடன் தொடர்புடையது. சீதாதேவியை மீட்பதற்காக, இராவணனுடன் போர் செய்வதற்கு, வானரப்படைகளுடன் இலங்கையை வந்தடைந்த இராமர் வானரப்படைகளின் நீர்த்தேவையை பூர்த்தி செய்வதற்காக தனது அம்பை ஊன்றி, நீர் எடுத்த இடமே இந்த நிலாவரைக்கிணறு என்று நம்பப்படுகிறது. நிலாவரைக்கிணற்றுக்கு அருகில் ‘நவசைலேஸ்வரம்’

எனக்குறிப்பிடப்படும் ஒரு சிவனாலயம் காணப்படுகின்றது. இன்று அதிகமான சுற்றுலாப்பயணிகள் வருகை தந்தவண்ணமுள்ள ஒரு இராமாயணச்சுற்றுலா மையமாகவும், யாழ்ப்பாணத்தில் இராமாயணத்துடன் தொடர்புடைய மரபுரிமைச் சொத்தாகவும் இந்த நிலாவரைக்கிணறு விளங்குகின்றது.

## குகைகளும் நீர்வீழ்ச்சிகளும்

இராமாயணத்துடன் தொடர்புடைய அழகான குகைகளும், நீர்வீழ்ச்சிகளும் இலங்கையில் பதுளை, நுவரெலியா, மாத்தளை, கண்டி போன்ற மாவட்டங்களில் காணப்படுகின்றன. இராவணன், சீதாப்பிராட்டியாரை மறைத்து வைப்பதற்காக பயன்படுத்திய குகைகளும், நீராடுவதற்காக பயன்படுத்திய நீர்வீழ்ச்சிகளும் இராமாயணச்சுற்றுலா மையங்களாக விளங்குகின்றன.

## இராவணன் குகை

இராமாயணச்சுற்றுலா மையங்களில் 'இராவணன்குகை' அதிகமான சுற்றுலாப்பயணிகளை கவரும் ஒரு இடமாகும். இலங்கையில் இராவணன் சீதையை மறைத்து வைக்கவும், பாதுகாக்கவும் பயன்படுத்திய குகைகளில் பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள இக்குகை மிக முக்கியமானதாகும். பண்டாரவளையில் இருந்து பதினொரு கிலோமீற்றர் தொலைவில் எல்லே நகரம் அமைந்திருக்கின்றது. நகரத்தின் மத்தியிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மலையில் இராவணன் குகை அமைந்திருக்கின்றது. இராவணன் குகை 50 அடி அகலமும் 150 அடி நீளமும் 60 அடி உயரமும் கொண்டதாக கற்களால் அமைக்கப்பட்டிருக்கின்றது. இக்குகை மூலமாக இராவணனது கட்டடக்கலைத் தொழினுட்பம் நன்கு வெளிப்படுகின்றது. மலைகள் வழியாக விரைவான போக்குவரத்தினை செய்யக்கூடிய இரகசிய பாதைகளாக, குகையினுள் காணப்படும் சுரங்கப்பாதைகள் செயல்பட்டன. சுரங்கப்பாதைகள் அனைத்து முக்கியமான நகரங்கள், விமான நிலையங்கள், பால் பண்ணைகள் என்பவற்றுடன் முக்கிய வலையமைப்பைக் கொண்டிருந்தன. இதனுடைய வடிவமைப்பினைப் பார்க்கின்றபோது இது சாதாரண மனிதரால் உருவாக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. இக்குகைக்கு படிக்கட்டுக்கள் வாயிலாக செல்ல முடியும். கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேலான படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. செங்குத்தாகவும் சமாந்தரமாகவும் வளைவுகள் நிறைந்ததாகவும் இப்படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

குகைக்குச்செல்லும் பாதையில் குருவிகளின் சத்தங்களும் நீர்வீழ்ச்சிகளின் சத்தங்களும் மனங்களை சாந்தப்படுத்துகின்றன. அதிகமான சுற்றுலாப்பயணிகள் இங்கு வருகை தந்து இக்குகையின் அழகை இரசிப்பதோடு, இக்குகை அமைக்கப்பட்டிருக்கும் இராவணனின் கட்டடத் தொழினுட்பத்தையும் கண்டு வியந்து செல்கின்றனர்.

**இராவணன் நீர்வீழ்ச்சி**


இலங்கையில் அதிகமான சுற்றுலாப்பயணிகள் பார்வையிடுகின்ற குளிர்ச்சியான அழகிய சுற்றுலாமையமாக விளங்குவது இராவணன் நீர்வீழ்ச்சியாகும். இராமாயணத்துடன் தொடர்புடையது என்பதனால், இராமாயணச்சுற்றுலா மையமாக இது விளங்குகின்றது. இந்நீர்வீழ்ச்சி பதுளை மாவட்டத்தில் ‘கிரிந்தி’ ஆற்றில் அமைந்துள்ள ஒரு நீர்வீழ்ச்சியாகும். இது எல்லை – வெள்ளவாயா பெருந்தெருவிற்கு அருகே அமைந்துள்ளது. பாதையில் இருந்தபடியே இந்நீர்வீழ்ச்சியின் அழகினை கண்டுகளிக்க முடியும். நீர்விழ்ச்சி மூன்று படிநிலைகளில் பாய்கிறது.

நீர்வீழ்ச்சியின் உயரத்தில் உள்ள நன்னீர் ஏரிக்கு அருகே இராவணன் தவம் செய்ததாக ஒரு ஐதீகக்கதை நிலவுகிறது. நீர்வீழ்ச்சிக்குப் பின்னால் அமைந்துள்ள மலைக்குகையில் சீதாதேவியை இராவணன் மறைத்து வைத்திருந்தான் என்றும் இந்த நீர்வீழ்ச்சியானது இராமாயணக் கதையுடன் தொடர்புபடுத்தப்படுவதனால் இராமாயணச்சுற்றுலா மையங்களில் ஒன்றாக இது விளங்குகின்றது. நீர்வீழ்ச்சியின் அழகினைக் கண்டுகளிப்பதற்காக வருகை தரும் சுற்றுலாப்பயணிகள் இங்கு நீராடியும் செல்கின்றனர். நீர்வீழ்ச்சியின் இரண்டு பக்கங்களிலும் காடுகள் என்பதனால் அங்கு வாழும் குரங்குகள், பறவைகள் போன்றனவும் சுற்றுலாப்பயணிகளை அதிகம் கவருகின்றன. இந்த இயற்கைச் சூழமைவினைக் கண்டுகளிப்பதற்காக, அதிகமான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் இந்த நீர்வீழ்ச்சி இருக்கும் இடத்திற்கு வருகை தந்தவண்ணமுள்ளனர்.

**முடிவுரை**

இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பலம் சேர்க்கின்ற துறைகளுள் சுற்றுலாத்துறை முக்கியமான துறையாக விளங்குகின்றது. சுற்றுலா மூலமாக நாட்டிற்கு அதிக வருமானம் கிடைப்பதனால், அத்துறையில் தொழில்வாய்ப்புக்களும் பெருகி வருகின்றன. இலங்கையின் சுற்றுலாத்துறையில் இன்று இராமாயணச் சுற்றுலா அனைவராலும் விரும்பப்படுகின்ற ஒரு சுற்றுலாவாக வளர்ச்சி கண்டுள்ளது. இதற்கான காரணம், வரலாற்றினை அறிந்து கொள்ளவும், ஆன்மிகத்தை வளர்க்கவும், சமயப்பற்றை அதிகரிக்கவும் அதிக மனநிறைவைப் பெறுவதற்கும் இராமாயணத் தொன்மங்கள் விரவிக்காணப்படுகின்ற இடங்களுக்குப் பயணம் செய்வதிலும் விழாக்கள், கலைக்கூறுகள் ஆகியவற்றைப் பார்வையிடுவதிலும், இரசிப்பதிலும் ஏராளமான சுற்றுலாப்பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்றமையே ஆகும்.

எனவே, இலங்கையில் பல இடங்களில் இராமாயணம் தொடர்பான தொன்மங்கள் விரவிக் காணப்படுகின்றன. அவ்வாறான இடங்கள் இன்று இராமாயணச்சுற்றுலா மையங்களாக, இந்துக்கலாசாரச் சுற்றுலாவியலில் மிகுந்த முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இதனால் இன்று இலங்கையில், 'இலங்கை இராமாயணச் சுற்றுலா தொகுப்புகள்' (Sri Lanka Ramayana Tour Packages) எனும் ஒரு தனிப்பிரிவே காணப்படுகின்றது. இது இலங்கையின் சுற்றுலாத்துறை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் பலம் சேர்க்கின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.







### உசாத்துணை

ஈஸ்வரன்,ச., (2006), சுற்றுலாவியல், பாவை பப்ளிகேசன், இராயப்பேட்டை, சென்னை.

கிருட்டினசாமி.வே., (2000), சுற்றுலா வளர்ச்சி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை–18.

சங்கர்,க., (2008), சுற்றுலாவும் பிறதுறைகளும், ஸ்ரீ மகேந்திரா கிராபிக்ஸ், சென்னை.

தங்கமணி,ம.இரா., (2006), சுற்றுலாவியல் ஓர் அறிமுகம், கொங்கு பதிப்பகம், சென்னை.

வரதராசன்,மு., (1995), யான் கண்ட இலங்கை, காக்ஸ்டன் அச்சகம், சென்னை.

Sivanandini.D., (2008), "Ramayana in Lanka", Chinmaya in Mission of Sri Lanka.

சஞ்சிகை

Fernando, P.I.N., Pabasara Sarangi, (2017), "Ramayana – trail as a cultural tourism product in Sri Lanka : New paradigm for destination marketing", Journal of Management , Kelaniya.

இணையத்தளங்கள்

https://srilanka.travel-culture.com/ramayana-train-in-sri-lanka.shtml

https://www.srilanka-ramayanatours.com/